செ.வெ.எண்: 34/பிப்ரவரி நாள்: 18.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

# கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை

# மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.02.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிக்கல் கிராமத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மரக்கன்று நடும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன்பின்பு, சாயல்குடியில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்து சிகிச்சை பெற்று வரும் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். மேலும் சிகிச்சைக்காக வரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து கடலாடி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 27.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி சேவை மைய கட்டிடத்தினையும், கருங்குளம் கிராமம் இந்திரா நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனிநபர் இல்ல கழிப்பறைகளையும், கருங்குளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை உரக்குழி தோண்டும் பணிகளையும், இதம்பாடல் கிராம ஊராட்சி சாலை ஓரமாக ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மரக்கன்றுகள் நடும் பணிகளையும் , ஏர்வாடி கிராமத்தில் ரூபாய் 2 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள மனநல காப்பக கட்டிடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது இராமநாதபுரம் ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.டி.ராமசாமி, மனநல மருத்துவர் மரு.பெரியார் லெனின், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (மருத்துவம்) திரு.ஜெயதுரை, கடலாடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**